# விசேட அறிவித்தல்

**தற்போது நிலவும் கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் சான்றிதழ் கிளையினால் பின்வரும் சேவைகள் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குப் பிரவேசிக்கவும்.**

## 1. நிகழ்நிலை (online) முறையின் மூலம் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளல்

2001 ஆம் ஆண்டினதும் அதற்குப் பின்னரான ஆண்டுகளினதும், க. பொ. த. (சாதாரண தர), க. பொ. த. (உயர் தர)ப் பரீட்சைச் சான்றிதழ்கள் **(விசாரணைகளுக்கு – 0112788137)**

## 2. மின்னஞ்சல் (email) மூலம் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளல்

(i) 2001 ஆம் ஆண்டுக்கு முந்திய க. பொ. த. (சாதாரண தர), க. பொ. த. (உயர் தர)ப் பரீட்சைச் சான்றிதழ்கள்

(ii) தர்மாசிரியர், ஆரம்ப பிரிவெனா, GIT போன்ற ஏனைய பரீட்சைச் சான்றிதழ்கள்

- மேற்குறித்த சான்றிதழ்கள் உரியவாறு வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு அல்லது விரைவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

## 3. மின்னஞ்சல் மூலம் சுட்டிலக்கத்தைத் தேடியறிதல்

க. பொ. த. (சாதாரண தர), க. பொ. த. (உயர் தர)ப் பரீட்சைகளின் சுட்டிலக்கங்களைத் தேடுவதற்கு மட்டும்.

**(விசாரணைகளுக்கு – 0112784323)**

## 4. பெயர்களில் திருத்தங்களை மேற்கொள்ளல்

க. பொ. த. (சாதாரண தர), க. பொ. த. (உயர் தர)ப் பரீட்சைச் சான்றிதழ்களிலுள்ள பெயர்களில் ஒன்று அல்லது இரண்டு எழுத்துக்களைத் திருத்த வேண்டியிருப்பின் மாத்திரம் பின்வரும் மின்னஞ்சல் முகவரியினூடாக விண்ணப்பிக்க முடியும்.

**email : -** **ol.al.changes@gmail.com**

தேவையான ஆவணங்கள்: வருடல் **(scan)** செய்யப்பட்ட,

- ❖ உரியவரின் கோரிக்கைக் கடிதம்
- ❖ பிறப்புச் சான்றிதழ்
- ❖ தேசிய அடையாள அட்டை
- ❖ பெயரை உறுதிப்படுத்துவதற்கான வேறு ஆவணங்கள்
- ❖ பெயர் மாற்றத்திற்குரிய பெறுபேற்று அட்டவணை

**(விசாரணைகளுக்கு – 0112784208)**

27.04.2021

பரீட்சை ஆணையாளர் நாயகம்